மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 15 முதல் 20 வரையில் மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

மின்விசைச் செக்கினால் தயாரிக்கப்படும் பொருட்கள்.

21—(*வினா எண். 3520) **திரு. கா. சொர்ணலிங்கம்:** மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கதர் கிராமத் தொழில் மின்விசைச் செக்கு உரிமையாளர்களால் தயாரிக்கப்படும் எண்ணெய் முதலான உற்பத்திப் பொருட்களை அரசு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விற்பனைக்கு ஏற்பாடு செய்யவும், விற்பனையை ஊக்குவிக்க மானியம் அளிக்கவும் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, கதர் கிராமத் தொழில் மின்விசைச் செக்கு உரிமையாளர்களால் தயாரிக்கப்படும் எண்ணெய் முதலான பொருட்களை அரசு கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்திட ஏற்கெனவே தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய மாவட்ட உதவி இயக்குநரின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. மானியம் அளிக்கும் திட்டம் இல்லை.

திரு. கா. சொர்ணலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைச் செக்குகளின் மூலம் தயாரிக்கப்படுகிற எண்ணெய்களை எல்லாம் சரியான முறையில் விற்பனை செய்ய முடியாத நிலைமையின் காரணமாக அந்த விசைச் செக்குகளை வைத்துக் கொண்டிருப்பவர்கள் அனைவரும் அதனை நடத்த முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பட்ட நிலைமையிலே அவற்றை கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரையில் எடுத்து விற்பனை செய்வதாகத் தெரியவில்லை. அதனை விரைவில் எடுத்து விற்பனை செய்வதற்கும் அந்த விசைச் செக்குகளை வைத்து இருப்பவர்கள் நஷ்டமடைந்து கொண்டிருப்பதால் அரசு மீண்டும் பரிசீலனை செய்து கடனாகவோ, மானியமாகவோ ஏதோ ஒரு வழியில் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவும் முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

1987 நவம்பர் 10]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, விசைச் செக்குகள் பெற்ற சங்கங்கள் மற்றும் தனி நபர்கள், எண்ணெய் விலை வெளி மார்க்கெட்டில் நன்கு உயர்வாக இருக்கிறபோது அவற்றை வெளி மார்க்கெட்டில் விற்பதற்குத்தான் முற்படுகிறார்கள். மாறுபட்ட நிலைமை இருந்தால்தான் கதர் வாரியத்தை அணுகி எண்ணெய் விற்பனை செய்துதர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார்கள். ஆகவே அவ்வப்போது சூழ்நிலைக்கேற்ப கதர்த்துறை உரிய நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

ஊமை, குருடர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் திட்டம்.

22—(*வினா எண் 5065) திரு. க. சோலைராசு: மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊமை, குருடர் போன்றவர்களை ஊக்குவிக்க துறையின் மூலம் வேலை வாய்ப்பு வழங்குகிற திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதற்கு முன்பு வேலை வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: (அ) மற்றும் (ஆ) சட்டமன்றப் பேரவை முன் விவர அறிக்கை ஒன்று தனியாக வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

உடல் ஊனமுற்றவர், ஊமை, குருடர் ஆகியவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு சமூக நலத்துறையின் மூலம் அரசு கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறது.—

சிறப்பு வேலை பழகும் திட்டம் :

சிறப்பு வேலை பழகும் திட்டத்தின் கீழ் **(Special Apprenticeship Programme)** பயிற்சி பெற்ற வேலையில்லா விழி இழந்தோர், காது கேளாதோர் மற்றும் உடல் ஊனமுற்றோர் தங்களுடைய பெயர்களை 17—4—1979 அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தவர்,